புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

==========================================================

# குறுந்தொகைப் பெண்பாற் புலவர்கள் பாடல்களில் வெளிப்படுவது பெண்மொழியா?

==========================================================

முனைவர் ஏ. சைலஜா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635601

==========================================================

**முன்னுரை**

ஆண்களைவிட பெண்களே தனது உடல், பாலியல் உறவு, தாய்மை போன்றவை குறித்தான அனுபவங்களையும் உணர்வுகளையும் படைப்பிற்குள் கொண்டுவர முடியும். பெண் தன்னுடைய கலை இலக்கியப் பிரதியில் முழுமையாகத் தன்உடம்பைப் பெய்துவைக்க வேண்டும், என்பதைப் பெண்ணியவாதிகள் வற்புறுத்துகின்றனர். “உன்னையே நீ எழுது. உன் உடம்பின் குரல்களுக்குச் செவிசாய். அப்பொழுதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனத்திலுள்ள மூலவளங்கள் எல்லாம் பொங்கிப் புறப்பட்டு வெளிவரும்” (பிரம்மராஜன் (தொ.ஆ.), 2001: 4) என்கிறார் ஹெலன். மேலும் அவர், “ஒரு பெண்ணின் உடம்பு தன்னுடைய ஆயிரக்கணக்கான உணர்ச்சி வெப்பத்தை

மூலநெருப்பைக் கொண்டு பலப்பல மொழிகளை ஒலி அதிர்வுகளாய் உருவாக்கிவிடக் கூடிய தனிச்சிறப்பு மிக்க மூலமொழியை உருவாக்கும்” (பிரம்மராஜன் (தொ.ஆ.), 2001: 4) என்கிறார்.

குறுந்தொகைப் பெண்பாற்புலவர்கள் பாடிய பெரும்பாலான பாடல்கள், ஆண்பிரிவையும், ஆணை நினைத்து ஏங்கிப் புழுங்குவதையும் காமவுணர்வின் வெளிப்பாட்டையும், முன்னிலைப்படுத்தியுள்ளன. பரத்தையை நாடிச் சென்ற கணவன் மீண்டுவரும்போது அவளின் எதிர்ப்பு சாந்தமான எதிர்ப்பாகவும், வலிமை குன்றிய மொழியில் பேசி அவனை ஏற்றுக்கொள்ளும் நிலையிலும் உள்ளன. அதற்கு மாற்றாக, பெண் தனது பாலியல் வேட்கைகளைச் சுதந்திரமாக, வெளிப்படையாகப் பேசும் இடங்களும் உண்டு. இவ்வாறு பண்பாட்டிற்கு உட்பட்டும் பண்பாட்டை மீறியும் வெளிப்பட்ட பெண்குரல் காமத்தின் வெளிப்பாடாக இருப்பதால் அது பெண்மொழியா? அல்லது காயடிப்புச்சிக்கலின் மொழியா? என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**ஆர்ப்பாட்டமான மொழி வெளிப்படல்**

ஒடுக்கப்படும் (அ) ஒடுக்கிக்கொள்ளும் இடத்தில் உபயோகப்படுத்துகின்ற மொழி வீரியப்படும் (வேலம்மாள், 2009:28) என்ற மொழியியல் அறிஞர் சிந்தனையைப் பெண்பாற்புலவர்களின் பாடல்வழி காணலாம். குறுந்தொகைப் பாடல்களுள் சில, பெண்மன உணர்வுகள் ஆர்ப்பாட்டமான மொழியில் வெளிப்பட்டுள்ளன. துணைவனின் பிரிவு பெண்ணை எந்த அளவிற்குப் பாதித்துள்ளது என்பதைத் தடையில்லாமல் வெளிப்படையாகக் கூறும் ஔவையார் பாடல் பின்வருமாறு,

**“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன் யானும் ஓர்பெற்றி மேலிட்டு**
**ஆஅஒல் எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே”          (குறு.28)**

இப்பாடலில் வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவனின் பிரிவால், தலைவி தூக்கமின்றி இரவில் வாடுகின்றாள். காமநோய் வருத்துவதோடில்லாமல் தென்றலும் வருத்துகின்றது. தலைவியை வருத்துகின்ற வாடைக்காற்றானது ஊர்மக்களைத் துயிலச் செய்கின்றது.

இவற்றைக் கண்ட தலைவிதன் வருத்தம் அறியாமல் தூங்கும் ஊர்மக்கள்மீது தன் வெறுப்புணர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளது. தன் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடாது என்பது அகவிதியாக இருக்கிறபோது, அதை மீறுகிறதாக, முட்டுவேனோ? தாக்குவேனோ? ஆஅ! ஒல்எனக் கூவுவேனோ? என்னும் மொழி அமைந்துள்ளது. இம்மொழி புலம்பலாக வெளிப்பட்டு இருப்பதால் இது ஆண்குறி இழப்பாகும்.

**மௌனமொழி வெளிப்படல்**

சங்க இலக்கியப் புனைவில் தலைவன் சிறைப்புறத்தே நிற்க, தலைவி தன்தோள் மெலிவைத் தோழிக்குக் கூறுவாளாய் வரைதல் வேண்டும் என்பதை அவனுக்குப் புலப்படுத்திய பாடல்,

**"இது மற்று எவனோ தோழி! முதுநீர்ப்**
**புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்,**
**இணர்வீழ் புன்னை எக்கர் நீழல்,**
**புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கன்**
**கண்டனமன், எம்கண்ணே, அவன்சொல்**
**கேட்டனமன் எம்செவியே, மற்று – அவன்**
**மணப்பின் மாண்நலம் எய்தித்**
**தணப்பின் ஞெகிழ்ப்ப, எம் தடமென் தோளே?"** **(குறு. 299)**

இப்பாடல் ஒரு பெண்ணின் வாழ்வில் மிக நெருக்கடியான சூழல்வந்து குவிகின்ற உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்தியுள்ளது. வெண்மணிப்பூதியார் தன் பாடலில், காதலன் அருகே இருக்கிறான் என்பதை அறிந்தும், தலைவி தன் உடலில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி மணந்துகொள்ள வேண்டும் என்று அவனிடம் நேரடியாகச் சொல்லமுடியவில்லை என்று கூறுகிறார். தலைவி பேசுவதைக் கேட்கும் தூரத்திலேதான் தலைவன் இருக்கிறான். ஆனாலும் தன் உணர்ச்சிகளைத் தோழியிடம்தான் கூறுகிறாள்.

பெண்களின் மொழி சத்தமில்லாமல் மௌனமாக ஒலித்திருக்கின்றது. மௌனத்திற்குப் பண்பாட்டு மன ஆதிக்கமே காரணமாகும். என்றாலும் அவள் மௌனமாக வெளிப்படுத்தியிருப்பது தந்தை பதிலியான தலைவன் மீதான காம உணர்வுகளாக இருப்பதால் அது ஆண்குறி விழைவு மொழியாகும்.

**எதிர்ப்புக்குரல் வெளிப்படல்**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தூதாக வந்த தோழிக்குத் தலைவி கூறியது.

> **“நல்நலம் தொலைய நலம்மிகச் சாஅய்**
> **இன்உயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு**
> **அன்னையும் அத்தனும் அல்லரோ**
> **புலவி அஃது எவனோ அன்பிலங்கடையே” (குறு. 93)**

தோழி! நல்ல பெண்மைநலம் கெடவும், உடல்மிக மெலியவும், இனிய உயிரானது நீங்குமாயினும் அவர்பால் பரிவு கூர்ந்த சொற்களைச் சொல்லுதல் வேண்டா. தலைவர் நமக்குத் தாயும் தந்தையும் அல்லரோ! அன்பு இல்லாதவிடத்து ஊடல் உண்டாவது எதற்கு? தலைவியின் மொழியால் தலைவனின் கூடா ஒழுக்கத்தை நேரடியாக எதிர்க்கும் கருத்தாடலை இப்பாடல் பேசுகிறது. தலைவி தலைவனுடன் ஊடல் கொள்வதால் எனக்கு என்னப் பயன் என்று நேரடியாக எதிர்க்கிறாள். இந்த எதிர்ப்பு தந்தை மீதான வெறுப்பு. என்றாலும் தலைவி தலைவனைத் தாயாகவும் தந்தையுமாக பார்ப்பதால் இது காயடிப்புச் சிக்கலின் வெளிப்பாடு என்று உளவியல் அடிப்படையில் புரிந்துகொள்ளலாம்.

**வருத்தம் – பெண்மொழி**

பரத்தையரில் பிரிந்து மீண்டுவந்த தலைவனுக்காகத் தூதுவந்த தோழியை நோக்கித் தலைவி வாயில் மறுத்துக் கூறிய பாடல்,

> **“நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே**
> **புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
> **கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு**
> **இனிய செய்தநம் காதலர்**
> **இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே” (குறு.202)**

தோழி! என் நெஞ்சம் மிகவருந்தும். முல்லை நிலத்தில் நெருங்கி முளைத்த சிறிய இலைகளை உடைய கண்ணுக்கு இனிமை தரும் நெருஞ்சியினது முள்ளைத் தந்தாற்போல, முன்பு இனியவற்றை செய்த நம்தலைவர் இப்பொழுது இன்னாதவற்றைச் செய்து ஒழுகுதலால் என்நெஞ்சு நோகின்றது. தான் செய்த தவறு யாது? என அறியாமல் தன்நெஞ்சு நோவதாகவும் வருந்துகிறாள். ஆணாதிக்கச் சமுதாயத்தில் மனைவி என்பவள் கணவனுக்குக் கட்டுப்பட்டவள். கணவனின் நடத்தை சூழலுக்கு ஏற்ப மாறும் தன்மையுடையது. ஆனால் பெண் என்பவள் காலங்காலமாகக் கற்பில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும். கற்புக்கோட்டிற்குக் கீழே இறங்காமல்தான் இப்பாடலில் "நோம், என்நெஞ்சே! நோம், என்நெஞ்சே!" என்று தன் ஆற்றாமையைத் தலைவி வெளிப்படுத்தியுள்ளாள். ஆற்றாமை வெளிப்பாடு தலைவன் இன்மையால் நிகழ்ந்துள்ளதால் ஆண்குறி இன்மையால் வெளிப்பட்ட மொழியாகும்.

**அறத்தின்பாற்பட்ட பெண்மொழி**

பெண்ணானவள் செய்வதற்குரியது இது, செய்யக்கூடாதது இது என்று தானே வரையறுத்துக் கொள்வதை ஆதிமந்தியின் பாடலில் காணமுடிகின்றது.

**"மள்ளர் குழீஇய விழவி னானும்**
**மகளிர் தழீஇய துணங்கை யானும்**
**யாண்டும் காணேன் மாண்தக் கோளை**
**யானும்ஓர் ஆடுகள மகளே, என்கைக்**
**கொடுஈர் இலங்குவளை நெகிழ்த்த**
**பீடுகெழு குரிசிலும்ஓர் ஆடுகள மகனே"** (குறு. 31)

பெண்ணானவள் எதையும் தனித்துச் செயல்படும் நிலையில் சமூகம் இருக்க விடுவதில்லை. விதிக்கப்பட்ட வரையறைகள் அவர்களின் இயல்புகளாக மாறிவிட்டன என்பதே உண்மை. பெண் அறம் பெண்களால் வகுத்துக் கூறப்படவில்லை. ஆண்களால் வகுக்கப்பட்ட இந்த அறத்தைச் சமூக வழக்கிற்கு அஞ்சி, இறுதியில் அதற்குப் பழக்கப்பட்டுப்போய் ஏற்றவள் பெண்.

மேற்கூறப்பட்ட வரையறைக்கேற்ப இப்பாடலில் தலைவி, தலைவனைப் பரத்தையோடு ஆடுகின்ற துணங்கை ஆட்டத்தில் தேடுகின்றாள். இத்தகைய துணங்கை

ஆட்டத்திற்குக் கற்புடையப் பெண்டிர் செல்லுதல் ஆகாது. நான் ஒரு ஆடுமகள். பல இடங்களுக்குச் செல்லுவதற்கு உரியவள் என்றாலும் காதலனைத் தேடிச் சென்றதனால் இழிநிலைக்கு ஆளாயினேன் என்கிறாள். இத்தகைய வரையறை காலந்தோறும் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் வேரூன்றிக் காணப்படுகின்றது. இப்பாடலில் பெண் தனது மிக்க காமத்தைப் புலப்படுத்துதல் ஆகாது என்ற கருத்துப்படப் பேசுவது சமூகத்திற்குப் பெண் கட்டுப்பட்டவள் என்ற எண்ணத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மிகுதியான கட்டுப்பாடு கொண்ட சமூகமாக இருந்தாலும் தனது காமம் மீதான வருத்தத்தை வெளிப்படுத்த முடிகிறது என்றால் பண்பாட்டுக்கு அடங்காத நனவிலி மனத்தின் உந்துதல் ஆகும். அதுவும் தந்தை பதிலியான தலைவனைத் தேடிச் செல்வதாக வருவதால் அது ஆண்குறி விழைவு மொழியாகும்.

**பெண்ணிய அடையாளம் – மொழி**

ஆண் பற்றிய கருத்தாக்கங்கள் அனைத்தும் பெருமை, வீரம் என்றே கூறப்படுகிறது. பெண் என்றால் மென்மை, பணிவு என்ற இயல்பினைப் பெண்களுக்கான மொழிக்கூறுகள் என்று கூறி மட்டுப்படுத்தும் நிலை உள்ளது. தோழி தலைவனுடன் போகவேண்டுமென்று கூற, தலைவி அவனுடன் செல்லுதலால் நாண் அகலுமென்று இரங்கிக் கூறிய பாடல்,

**“அளிதோ தானே நாணே நம்மொடு**
**நனிநீடு உழந்தன்று மன்னே இனியே**
**வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை**
**தீம்புனர் தெரிதர வீந்துஉக்கா அங்குத்**
**தாங்கும் அளவைத் தாங்கி**
**காமம் தெரிதரக் கைந் நில் லாவே”** **(குறு. 149)**

தோழி! நாணம் நம்மொடு மிக நெடுங்காலம் உடனிருந்து வருத்தியது. வெள்ளியபூவை உடைய கரும்பின், உயர்ந்த மணலை உடைய சிறிய கரையானது, இனியநீர் நெருங்கி மோதுவதால் கரை அழிந்து உட்குறைந்தாற்போல், தாங்கும் அளவில் தாங்கிய காமம் மேன்மேலும் நெருக்குவதால் என்னிடம் தங்கி நில்லாமல் போய்விடும். அது இரங்கத்தக்கது.

மேற்கூறிய வெள்ளிவீதியாரின் பாடல் நாணத்திற்கு விளக்கம் அளிப்பதுபோல அமைந்து காணப்படுகிறது. நாணம் என்ற சொல் பெண்ணிய அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது. நாணம் விலகுவதற்குப் பெண் இரங்குகிறாள். இதன்மூலம் காமத்திற்குத் தடையாக நாணம் இருப்பதை அவள் வெளிப்படுத்தியுள்ளாள். அந்த நாணம் தலைவனுடன் செல்வதால் விலகும் என்பது ஆண்குறியை அடைந்தால் ஆண்குறி இன்மை நீங்கும் என்பதன் வெளிப்பாடாகும்.

மனித சமூகக் கண்டுபிடிப்புகளில் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு மொழியாகும். பெண்களின் படைப்புகளில் பயன்படுத்தும் மொழியில் பெரும்பாலும் அச்சவுணர்வும் அவல நிலையும், வெறுப்புத் தன்மையும் அதிகமாக வெளிப்படுகிறது. அதற்கு முக்கியக் காரணம், ஃபிராய்டு கூறும் காயடிப்புச் சிக்கலே. பெண் என்பவள் பிறப்புறுப்பு இழப்புச் சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கிறாள். எனவே ஆணைவிடத் தன்னை குறையுடையவளாக எண்ணுகிறாள் (பஞ்சாங்கம், 2007:71-72). மேற்கண்ட பாடல்களில் பெண்மொழி ஆண்குறி இன்மை, ஆண்குறி விழைவு ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. ஆண்குறி இன்மை, ஆண்குறி விழைவு ஆகியவை பெண் காயடிப்புச் சிக்கலின் வெளிப்பாடாகும். ஃபிராய்ட் கருத்துப்படி பெண்கள் பிறவி முதலாகவே மனதளவில் ஊனமுற்றவர்களாக (காயடிப்புச் சிக்கல்) இருக்கிறார்கள் என்பதைக் குறுந்தொகைப் பெண்பாற்புலவர்கள் பாடல்களிலிருந்து அறிய முடிகிறது. எனவே குறுந்தொகைப் பெண்பாற் புலவர்களின் மொழி பெண்மொழியல்ல பண்பாட்டு இறுக்கத்தால் இடிப்பஸ் பருவத்தில் உருவான காயடிப்புச்சிக்கலின் மொழியாகும். பெண்களைச் சமுதாயத்தில் ஆடவர்க்கு இணையாக அனுமதித்தல் என்பது, ஆண்களுக்குரிய அதிகாரத்தைப் பெண் அடைதல் என்பதாகும். இங்கு அதிகாரம் ஆணின் குறியீடாக இருப்பதால், அந்த இடம் ஆண்குறியை இழந்தப் பெண்ணுக்குக் கிடைக்கும்போது அது பெண்ணின் ஆண்குறி இழப்பிற்குப் பதிலியாகிறது. பண்பாட்டு இறுக்கம் படிப்படியாகக் குறைந்து, குடும்ப அமைப்பும் சிதைந்து, சமூகம் பாலியல் பொதுவுடைமையை நோக்கி நகரும்போது காயடிப்புச் சிக்கலின் விளைவு இல்லாமல் போய் மானுடம் இயற்கையில் ஒன்றாகும்.

**துணைநூற்பட்டியல்**

- சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), 2007 : **குறுந்தொகை**, சைவசித்தாந்தக் கழகம், சென்னை.
- இரவிச்சந்திரன், தி.கு., 2007: **ஃபிராய்ட் யூங் அறிமுகமும் நெறிமுகமும்,** அடையாளம், சென்னை.
- நலங்கிள்ளி, அரங்க., 1999 : **ஃபிராய்டின்கலைஇலக்கிய உளப்பகுப்பாய்வு**,
- வாணிதாசன் பதிப்பகம், புதுவை,
- நலங்கிள்ளி, அரங்க., 1992 : **இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்**, வாணிதாசன் பதிப்பகம், புதுவை.
- நலங்கிள்ளி, அரங்க., 2001: **உளப்பகுப்பாய்வுநோக்கில் சங்க அகப்பாடல்கள்,** தமிழியல் ஆராய்ச்சி, புலமைமன்றம், சென்னை.
- நாகமணி, சி., 2004 : **குறுந்தொகை – ஓர் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை**, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.
- பஞ்சாங்கம், க., 2007 : **பெண்மொழிபடைப்பு**, காவ்யா, சென்னை,
- பிரம்மராஜன், ஆர்., சிவக்குமார்,. (தொ.ஆ.), 2001 : **அவ்வைமண்ணில்பெண் எழுத்தாளர்கள்**, மருதா, சென்னை.
- வேலம்மாள், நா., 2009 : **பெண்மையவாதம்,** காவ்யா, சென்னை,